
# அதிகரிக்கும் சந்தை போட்டிகரத்தன்மை

போட்டியில் முன்னிலையில் திகழுங்கள்!

உங்கள் வியாபாரச் செயற்பாடுகளில் நிலைபேறாண்மைக்கு முக்கியத்துவமளிப்பதனூடாக, சந்தைப் போக்குகளை உங்களால் பின்பற்றக்கூடியதாக இருக்க முடிவதுடன், போட்டிகரமான அனுகூலத்தைப் பெறக்கூடியதாகவும் இருக்கும். நிலைபேறாண்மை சான்றிதழை பெற்றுக் கொள்வது என்பதனூடாக உங்களின் சந்தை நிலையை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்பதுடன், புதிய வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

உதாரணம்: உங்கள் வியாபாரத்துக்கு நிலைபேறாண்மை தொடர்பான சரிபார்ப்பு பட்டியல் ஒன்றை தயாரிக்கவும் அல்லது உலக பிரயாண மற்றும் சுற்றுலா சம்மேளனத்தினால் தயாரிக்கப்பட்ட ஹோட்டல் நிலைபேறாண்மை அடிப்படை அம்சங்கள் (Hotel Sustainability Basics) போன்ற சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சரிபார்ப்பு பட்டியல் ஒன்றை பின்பற்றவும்.



# குறைவடையும் செயற்பாட்டு செலவுகள்

பாரிய பெறுபேறுகளில் செல்வாக்கு செலுத்தும் சிறிய மாற்றங்கள்!

நிலைபேறாண்மையாக திகழ்கின்றமை என்பதனூடாக வினைத்திறனாகவும், நுகர்வு தொடர்பில் அவதானமாகவும், நீண்ட கால அடிப்படையில் குறைந்த செயற்பாட்டு செலவுகளை பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்களை கொண்டிருப்பதை பேண முடியும்.. நிலைபேறாண்மை பயணத்தை முன்னெடுப்பதற்கு, உங்களின் வலு, நீர் மற்றும் கழிவு நுகர்வை ஆராய்ந்து, பயன்பாட்டை அவதானித்து, மாற்றத்துக்கான முதல் படியாக கொண்டிருக்கலாம்.

உதாரணம்: துவாய் மற்றும் மேல் விரிப்புகளை மீள பயன்படுத்தும் முறையை அறிமுகம் செய்வதனூடாக, மின்சார மற்றும் நீர் நுகர்வையும், தனிநபர் நேரத்தையும் பெருமளவில் குறைத்துக் கொள்ள முடியும்.



நிலைத்தன்மையைப் பின்பற்றும் வணிகங்கள் இயற்கையைப் பாதுகாக்க முயல்கின்றன மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாக்க நனவான முயற்சிகளை மேற்கொள்கின்றன. இது வாடிக்கையாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் பார்வையில் வணிகத்தின் உருவத்தை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், அனைவருக்கும் வளங்கள் கிடைப்பதை மேம்படுத்துகிறது

## நிலையான சுற்றுலா என்றால் என்ன?

நிலையான சுற்றுலா என்பது சுற்றுலா, அதன் தற்போதைய மற்றும் எதிர்கால பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள், பார்வையாளர்கள், தொழில், சுற்றுச்சூழல் மற்றும் புரவலன் சமூகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சுற்றுலா ஆகும்.

**நீங்கள் இல்லை என்றால், யார்?இன்றே செயல்படுங்கள் 👉 நிலைத்தன்மையை சிந்தியுங்கள் 🌎**

USAID Indo-Pacific Opportunity Project (IPOP)
International Development Group LLC

56/6A Horton Place
Colombo 7, Sri Lanka
Tel: 94-112697052

USAID
FROM THE AMERICAN PEOPLE

# நிலைபேறாண்மைக்கான வியாபார நேர்வு



Booking.com'இன் நிலைபேறான பிரயாண அறிக்கை 2022 இன் பிரகாரம், 46% ஆன பிரயாணிகள், வருடத்தில் ஒரு தடவையேனும் நிலைபேறான தங்குமிடங்களில் தங்குவது கண்டறியப்பட்டுள்ளது.

Expedia Group (2022) இனால் முன்னெடுக்கப்பட்ட நிலைபேறான பிரயாண ஆய்வில், 90% ஆன நுகர்வோர்கள் பிரயாணம் செய்கையில் நிலைபேறான தெரிவுகளில் அக்கறை கொள்வதாக கண்டறியப்பட்டிருந்தது.



### இந்த இலக்கங்கள் உங்கள் வியாபாரத்துக்கு என்ன அர்த்தத்தை வழங்குகின்றன?

- நிலைபேறான பிரயாணத் தெரிவுகள், தங்குமிடம் மற்றும் சேவைகள் போன்றவற்றுக்கான சர்வதேச கேள்வி உறுதியாக அதிகரித்த வண்ணமுள்ளது.
- பிரயாணிகள் தமது சூழல்சார் தாக்கங்கள் தொடர்பில் அதிகளவு கரிசனை கொள்வதுடன், அவற்றை தணித்துக் கொள்வதற்கான வழிமுறைகளை இனங்காண்பதில் அதிகம் கவனம் செலுத்துகின்றனர்.

நிலைபேறாண்மையை பின்பற்றுவது என்பது இனியும் தெரிவல்ல, மாறாக கண்டிப்பான தேவையாக அமைந்துள்ளது. சுற்றுலா சந்தையில் போட்டிகரமான அனுகூலத்தை வழங்குவதற்கு உங்கள் வியாபாரத்திலும் நிலைபேறாண்மையை உள்வாங்குங்கள்!

USAID
FROM THE AMERICAN PEOPLE

# நிலைபேறாண்மைக்கான வியாபார நேர்வு

## இடர் முகாமைத்துவத்தை மேம்படுத்தல்

உங்கள் வியாபாரச் செயற்பாடுகளில் நிலைபேறாண்மைக்கு முக்கியத்துவமளிப்பதனூடாக, சந்தைப் போக்குகளை உங்களால் பின்பற்றக்கூடியதாக இருக்க முடிவதுடன், போட்டிகரமான அனுகூலத்தைப் பெறக்கூடியதாகவும் இருக்கும். நிலைபேறாண்மை சான்றிதழை பெற்றுக் கொள்வது என்பதனூடாக உங்களின் சந்தை நிலையை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்பதுடன், புதிய வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

உதாரணம்: இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு மாறாக, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களை இயலுமானவரை கொள்வனவு செய்தல் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு தேசிய/ பல்தேசிய நிறுவனங்களை பயன்படுத்துவதற்கு மாறாக, உள்நாட்டு நிறுவனங்களை பயன்படுத்தல். இதனூடாக உங்கள் விநியோக தொடரில் வெளியக தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள முடியும். உங்களின் வியாபாரத்தின் மீட்சிக்கும் ஆதரவளிக்க முடியும்.



## நுகர்வோர் தன்னிறைவு மற்றும் நேர்த்தியான பிரசாரம்

### பாரிய பெறுபேறுகளில் செல்வாக்கு செலுத்தும் சிறிய மாற்றங்கள்!

நிலைபேறான சுற்றுலாவுக்கான சந்தை என்பது தொடர்ந்தும் வளர்ச்சியடைவதுடன், விரைவில் சுற்றுலாத் தொழிற்துறையின் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கும். மக்கள் அவதானமான சுற்றுலா செயற்பாட்டாளர்கள்/ வியாபாரங்களில் நாட்டம் காட்டுவதை ஆய்வுகள் காண்பிப்பதுடன், நிலைபேறான வியாபார செயன்முறைகளை பின்பற்றும் செயற்பாட்டாளர்களில் அதிகளவு பணத்தை செலவிட தயாராகவுள்ளமையும் அவதானிக்க முடிகின்றது. தாம் மேற்கொள்ளும் பிரயாண தெரிவுகள் தொடர்பில் பிரயாணிகள் சிறந்த உணர்வை பெற விரும்புவதுடன், தமது விடுமுறைக் காலப்பகுதியில் செலவிடும் பணம், கிராமிய சமூகத்தாருக்கு உதவுவதாக அமைந்துள்ளது என்பதை அறிந்து கொள்ள விரும்புகின்றனர்.

உதாரணம்: வனஜீவராசிகள் பாதுகாப்பு மற்றும் தொடர்புகள் போன்றவற்றில் சிறந்த செயன்முறைகளை பின்பற்றுவதனூடாக, சுற்றுலாப் பயணிகள் மத்தியில் உங்களின் சுற்றுலாப் பகுதி அதிகளவு பிரசித்தி பெற்றதாக அமைந்திருக்கச் செய்ய முடியும் என்பதுடன், சிறந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகளவு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் பகுதியாகவும் அமைந்திருக்கும்.



## ஊழியர்களை கவர்ந்து தக்க வைத்துக் கொள்ளல்

சிறந்த ஊழியர் கொள்கைகள், கவர்ச்சிகரமான மற்றும் நிலைபேறான ஊழியர் அனுகூலங்கள் மற்றும் நேர்த்தியான பணியிடச் சூழல் ஆகியவற்றை கொண்டிருக்கும் நிறுவனம், திறன் படைத்த ஊழியர்களை கவர்ந்து, அவர்களை தக்க வைத்துக் கொள்ள உதவியாக அமைந்திருக்கும். வியாபாரத்தின் உற்பத்தித்திறனை அதிகரித்துக் கொள்வதற்கு இது உதவியாக அமைந்திருக்கும் என்பதுடன், தொழிலில் இணைத்துக் கொள்ளல், முரண்பாடு தீர்த்தல் போன்றவற்றில் செலவிடும் நேரத்தையும் பணத்தையும் குறைத்துக் கொள்ளவும், வியாபாரத்தை அதிகம் இலாபகரமானதாக கட்டியெழுப்பிக்கொள்ளவும் உதவியாக அமைந்திருக்கும்.

உதாரணம்: கொடுப்பனவுகளுடனான விடுமுறை வழங்கல் மற்றும் மேலதிக நேரம் பணியாற்றுவதற்கு கொடுப்பனவு மேற்கொள்ளல் போன்றன திருப்திகரமான பணி வாழ்க்கை சமநிலையை தோற்றுவிப்பதுடன், உற்பத்தித்திறன் அதிகரிப்புக்கும் ஏதுவாக அமைந்திருக்கும்.



## உள்ளக மற்றும் வெளியக புத்தாக்கங்களை முன்னெடுத்தல்

வினைத்திறனான மற்றும் ஆக்கபூர்வமான விருந்தினர் அனுபவங்களை ஏற்படுத்திக் கொடுப்பது என்பது ஊழியர்கள் மற்றும் நிர்வாகத்தினர் நிலைபேறாண்மையை பின்பற்றுவதில் தங்கியுள்ளது. உள்நாட்டு சமூகங்கள் மற்றும் பங்காளர்களுடன் பங்காண்மைகளை கட்டியெழுப்புவதனூடாக, சமூக மற்றும் கலாசார மூலதனத்தை ஊக்குவித்துக் கொள்ள முடியும் என்பதுடன், சுற்றுலா தீர்வை மேம்படுத்தக்கூடிய புத்தாக்கமான தீர்வுகளை உருவாக்கிக் கொள்ள வழிகோலும். உள்நாட்டு கைவினை பொருட்கள் தயாரிப்புகளுக்கு மூலப் பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு சமூகத்தாருக்கு வியாபாரங்கள் உதவிகளை வழங்கலாம் அதனைத் தொடர்ந்து அவற்றை கொள்வனவு செய்து அல்லது அந்த தயாரிப்புகளை தமது பகுதிகளில் கொண்டிருப்பதற்கு உதவுதல் மேற்கொள்ளலாம்.

உதாரணம்: உள்ளகமட்டத்தில், சமையலறை ஊழியர்களால், தோடை மற்றும் எலுமிச்சை வெட்டுத் துண்டுகளை பயன்படுத்தி ஜாம்கள் அல்லது பதப்படுத்திய பொருட்களை தயாரித்துக் கொள்ளலாம்.



## நிதியைப் பெற்றுக் கொள்ளல்

நிலைபேறாண்மை மாதிரியின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் வியாபாரத்துக்கு வாய்ப்புகள் கிடைப்பதுடன், தமது நிலைபேறாண்மை நிகழ்ச்சி நிரலை மேலும் முன்னெடுத்துச் செல்கிற து. காலநிலை மாற்றம், வளங்கள் தீர்ந்துபோதல் மற்றும் வியாபார பெறுமதிகள், முதலீடுகள் போன்றவற்றினால் எதிர்பார்க்கப்படும் பெறுமதிகளில் திருப்பங்கள் போன்றவற்றால் எழும் இடர்களால், நிலைபேறான வியாபார மாதிரிகளுக்கு இயற்கையாகவே திசை திருப்பப்படுகின்றன. எனவே, நிலைபேறான செயற்பாடுகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் பெருமளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உதாரணம்: உள்ளடக்கம் மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றை புத்தாக்கமான வழிமுறைகளில் பின்பற்றும் வியாபாரங்களுக்கு நன்கொடை வழங்குநர்களின் திட்டங்களினூடாக மானிய உதவிகள் வழங்கப்படும்.



## நிலைபேறாண்மையினூடாக உறுதித் தன்மையை எய்த முடியும்

நிலைபேறாண்மையை பின்பற்றல் என்பது மக்கள் மற்றும் புவியை பற்றியது மாத்திரமல்ல, உங்கள் வியாபாரத்தின் தொடர்ச்சிக்காக மீட்சித் தன்மை என்பதைப்பற்றியதுமாகும். உங்கள் வியாபாரத்தின் ஊழியர்கள் மற்றும் வளங்களை தக்க வைத்துக் கொள்வது என்பதும் வியாபாரத்தின் நிதிசார் உறுதித் தன்மைக்கு பங்களிப்பு செலுத்தும்.

உதாரணம்: உள்நாட்டு மூலப் பொருட்களைக் கொண்டு தளபாடங்கள், அலங்காரப் பொருட்கள், மெனியுக்களை தயாரித்தல் மற்றும் பான வகைகளை தயாரித்தல் போன்றவற்றினூடாக உள்நாட்டு கலாசாரத்தின் பிரத்தியேகமான அம்சங்களை கொண்டாடுங்கள்.

